முரசு 16 யாதவர் பேரவையின் செய்தி மாத இதழ் ஒலி 2

# ஒலிக்கும் யாதவர் முரசு

ஆகஸ்ட் 2020

ஸ்ரீ விகாரி வருடம், ஆடி – ஆவணி மாதம் ஆயுள் சந்தா ரூ. 510/– இதழ் விலை ரூ. 10/–

உறவுகளோடு
இணைவோம், உயர்வோம்

யாதவமே பாரதம்
பாரதமே யாதவம்






கிருஷ்ண ஜெயந்தி மற்றும் விநாயகர் சதுர்த்தி – யாதவர் பேரவை சார்பாக வாழ்த்துக்கள்!


மெக்ரனெட்
McRennett
மெக்ரனெட்
ஃப்ராண்டியர் மார்கட்டிங் & அட்வர்டைசிங் பி.லிட்.
McRennett
Best Compliments From
McRennett

முரசு 16 ஒலி 2

# ஒலிக்கும் யாதவர் முரசு

யாதவர் பேரவையின் செய்தி மாத இதழ்

ஆகஸ்ட் 2020 ஆயுள் சந்தா ரூ. 510/-

ஆசிரியர்
டாக்டர். ஆர். காந்தையா, M.S. (General)
இணைஆசிரியர்
திரு. ஜி. உலகநாதன் யாதவ், எம்.ஏ.,பி.எல்.,

"கல்வி அறியாதவனே இல்லை என்று
சொல்லும் காலம் வரவேண்டும்
கற்றவனும் கொற்றவன்போல்
வாழவேண்டும்"

ஆசிரியர் இலாகா முகவரி
**யாதவர் பேரவை**
27/11, பைகிராப்ட்ஸ் ரோடு, 2வது தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email : yadavarperavai@gmail.com ☎: 044 - 2861 3077, 94441 34142
தொடர்பு கொள்ளும் நேரம் : 10.00 am - 1.00 pm - 3.00 pm - 6.00 pm ஞாயிறு : 10.00 am - 1.00 pm
Facebook=> http://www.facebook.com/yadavarperavai Google+=> http://www.google.com/+yadavarperavai

## கிருஷ்ணஜெயந்தி



திருநெல்வேலி வாக்கிய பஞ்சாங்கம் ஆசிரியர் ஸ்ரீ. G. ஸ்ரீ. நிவாசன் கூறுகிறார். (0462–2322292).

ஸ்மார்த்தாளுக்கு ஆவணி அவிட்டத்திலிருந்து 8ம்நாள் என்றொரு கணக்கு. அன்று அஷ்டமி திதி இருக்க வேண்டும். இந்த இரண்டும் கூடி இருந்தால் மாதம் பற்றி யோசிக்க வேண்டாம். அதனால் 11.08.2020 அன்று ஸ்மார்த்த அல்லது கோகுலாஷ்டமி.

3 அல்லது 4 வருடத்துக்கு ஒருமுறை இப்படி மாறி ( மாதம் மாறுவது) வரும். வைஷணவர்களில் வைகானசம் நட்சந்திரம் ஒரு நாழிகை இருந்தாலும் பரவாயில்லை அதே போல திதி. கார்த்திகை மற்றும் ஸப்தமி யோசிக்க மாட்டார்கள். அதனால் அவர்களுக்கு 09.09.2020 புதன் வைகானச ஸ்ரீ ஜெயந்தி.

ஆனால் பாஞ்சராத்ரா மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்பார்கள். அதனால் 10.09.2020 வியாழன் அஷ்டமி, ரோகிணி சுத்தமாக உள்ளது. அதனால் அன்றைய தினம் பாஞ்சராத்ரா ஸ்ரீ ஜெயந்தி.

**திரு. ஜி. உலகநாதன் யாதவ்** எம்.ஏ., பி.எல்

யாதவர் பேரவை சார்பாக பொதுச்செயலாளர் திரு. அரசு சீனிவாசன் யாதவ் YP நல அறக்கட்டளை பொருளாளர் திரு. P. அசோக்குமார் யாதவ் கிருஷ்ணஜெய்ந்தி தேதி மாற்றம் வேண்டி முதல்வர் அலுவலுகத்திற்கு சென்று மனுஅளித்தனர்

# யாதவர் பேரவை


பதிவு எண்: 288 / 2005

27/11, பைகிராப்ட்ஸ் ரோடு 2வது தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

தொலைபேசி - 044-2861 3077/கைபேசி 9444134142

Gmail - yadavarperavai@gmail.com


**டாக்டர். ரா. காந்தையா யாதவ்**
நிறுவனர்

**திரு. வேலுசாமி யாதவ்**
உயர்மட்டகுழு தலைவர்

### மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு

பொருள் : செப்டம்பர் 10 (ஆவணி மாதம் 25ம் தேதி) ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழாவை கொண்டாடும் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலைமைச்சர் அவர்கள், அரசு விடுமுறை தினமாக பரிசீலிக்ககக்கோரி.

ஆதாரம் : அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோவில் உற்சவ விவரங்கள்

ஐயா,

பொருள் : கோகுலாஷ்டமி தேதி – மாறுதல் தொடர்பாக

பகவான் கிருஷ்ணர் அவதரித்த தினமாக ஆவணி மாதம் அஷ்டமி திதியும் ரோஹிணி நட்சத்திரமும் சேர்ந்த நாளில் கோகுலாஷ்டமி தினமாக கொண்டாட புராணங்களும் வழிகாட்டுகிறது .

வைஷ்ணவர்களும், கிருஷ்ணரை குலக் கடவுளாக வழிபடும் எங்கள் யாதவ குலமும் அதையே பலகாலமாக பின்பற்றி வழிபாடு செய்து வருகிறோம் .

திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்த சாரதி கோயிலிலும் ,

திருச்சி அருள்மிகு திருவரங்கம் கோயிலிலும் இதையே பின்பற்றி பூஜைகள் நடத்தப படுகின்றன .

ஆனால் காலண்டரில் ஆகஸ்ட் 11 வேறு நட்சத்திரமும் ,ஆடி மாதமும் சேர்ந்த வேறு நாளில் கோகுலாஷ்டமி என குறிப்பிட்டு அரசு விடுமுறை எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இது போன்ற மாறுதலை சென்ற வருடமும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வைத்த போது தாங்கள் தயை கூர்ந்து அதிலுள்ள உண்மையை எடுத்துக் கொண்டு அரசு விடுமுறை தினத்தை மாற்றி தந்தமைக்கு நன்றி தெரிவிப்பதுடன் இவ்வருடமும் அதே போல் மாற்றி தந்து வைஷ்ணவர்களும், கிருஷ்ணரை கும்பிடும் அனைத்து தமிழர்களும் மகிழ்ச்சி பெற ஆவண செய்ய வேணடுமெனவும் வரும் செப்டம்பர் 10 அன்று கோகுலாஷ்டமி அரசு விடுமுறை தினமாக அறிவிக்க யாதவர்கள் சார்பாக இந்த கோரிக்கையை பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

நன்றி !

உங்கள் அன்புடன்

சென்னை

06-08-2020

திரு. பா. அரசு சீனிவாசன் யாதவ்
பொதுச் செயலாளர் யாதவர் பேரவை தமிழ்நாடு


தலைவர் : திரு. ஜி.ஜி.கண்ணன் யாதவ் சேலம்
பொதுச் செயலாளர் : திரு. பா.அரசு சீனிவாசன் யாதவ் சென்னை
கூடுதல் பொதுச் செயலாளர் : திரு. ஸ்ரீதர் யாதவ் திருச்சி
பொருளாளர்: திரு. ஜி.கே.ஜெய்குமார் யாதவ் சென்னை
தலைமை நிலைய செயலாளர் : திரு. கோதண்டராமன் யாதவ் சென்னை
மாநில அமைப்பு செயலாளர் : திரு. இராதாகிருஷ்ணன் யாதவ் திருச்சி

பேரவை நல அறக்கட்டளை
தலைவர் : திரு. சோலைமலை பிச்சை யாதவ் மதுரை
பொதுச்செயலாளர் : திரு. கே.பி. நவநீதகிருஷ்ணன் யாதவ் மதுரை
துணைத் தலைவர் : திரு. வசந்த குமார் யாதவ் சென்னை
பொருளாளர் : திரு. பி. அசோக் குமார் யாதவ் சென்னை.

## திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலுக்கும் யாதவர்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு

பெருமாளை மாடு மேய்க்கும் யாதவனாகவே பாவித்து மக்கள் வழிபடுகின்றனர்... இந்த ஆலயத்துக்கு நம் யாதவர்களால் எண்ணற்ற திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன... வேதவல்லி தாயார் அணியும் நகைகள் பெரும்பாலும் யாதவ மக்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டவை தான்..

முன்னொரு காலத்தில் வேதவல்லி என்னும் ஆயர்குலத்தை சேர்ந்த பெண் நோய்வாய்க்கப்பட்ட போது அவரது குடும்பத்தினர் அவரது நகைகள் அனைத்தையும் இந்த கோவிலுக்கு நன்கொடையாக அளித்து உள்ளனர்..வேதவல்லி அம்மையார் ஐயா டாக்டர் கோபால கிருஷ்ணன் யாதவ் அவர்களின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது...

ஒவ்வொரு ஆண்டும் பெருமாள் தான் பிறந்த நாளான ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி அன்று தன் உறவினர்களான யாதவர்களை சந்தித்து அவர்களுக்கு அருள்பாலிக்க திருவல்லிக்கேணி யாதவர் சத்திரத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கிறார்.. யாதவ சத்திரத்தில் அன்று நடக்கும் அபிஷேகம் ஆராதனைகளை ஏற்று கொள்கிறார்...

ஒரு சிறப்பு மிக்க நிகழ்வு என்னவென்றால் எப்போதும் பெருமாள் ஊர்வலம் நிகழும் போது பிராமணர்கள் நாலாயிர திவ்ய பிரபந்தம் இல்லாமல் ஊர்வலம் நடைபெறாது..ஆனால் ஒரே ஒரு நாள் இதற்கு விதி விலக்கு உண்டு..

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்திக்கு மறுநாள் நிகழும் உறியடி உற்சவதுக்கு வரும் பெருமாள் கையில் புல்லாங்குழலுடன் முரளி கண்ணனாக வருவார். அன்று யாதவ மக்களின் கோவிந்தா கோஷம் மட்டுமே ஒலிக்கும்.. எவ்வித வேத மந்திரங்கள் ஒலிக்கபடுவதில்லை..

**யாதவ குலத்தை சேர்ந்த மெக்ரனெட் குடும்பத்துக்கும் பெருமாளுக்கும் நீண்ட தொடர்பு உண்டு..** பெருமாள் கோவிலில் நடக்கும் ஆண்டாள் உற்சவம் இன்றுவரை அவரது குடும்பத்தினர் சார்பில் தான் காலம் காலமாக நடைபெற்று வருகிறது...

ஆண்டுதோறும் நடைபெறும் ஈக்காட்டுதாங்கல் திருவூடல் திருவிழாவிற்கு பெருமாள் தங்க பல்லக்கில் செனடாப் சாலையில் உள்ள மெக்ரனெட் குடும்பத்தினரின் பங்களாவில் உள்ள புஸ்ப மஹால் இல்லத்தில் எழுந்தருள்வார்..அந்நாள் அன்று திருமாலுக்கு வைணவ முறைப்படி கைங்கரியமும்,கண்டுகளிக்க வந்த அடியார்களுக்கு மனம் குளிர சிற்றுண்டியும் அவர்களது குடும்பம் சார்பில் வழங்கப்படுகிறது.ஒரு யாதவரின் வீட்டுக்கு தேடி வந்து அருள் கொடுத்து செல்வது மிக பெரிய பாக்கியமே...

பெருமாள் கோவில் ராஜகோபுரம் முன்னே அருகே உள்ள 16 கால் முன்மண்டபம் நம் யாதவ குலத்தை சேர்ந்தவரால் கட்டபட்டது.. அவரது பெயர் நரியங்காடு விஜயரங்க பிள்ளை யாதவ்..இன்றும் அந்த மண்டபத்தில் அவரது குடும்பத்தினர் பெருமாளை விழுந்து வணங்குவது போல் சிலை சிற்பத்தை காணலாம்..கல்வெட்டில் பெயர் பொறிக்கபட்டு இருக்கும்..

பெருமாள் கோவிலில் இன்றுவரை கருடசேவை மற்றும் அனுமந்த சேவை யாதவ மக்களால் நடத்தப்படுகிறது.. மாட்டு பொங்கல் அன்று யாதவர்கள் தங்கள் மாடுகளை அலங்கரித்து பெருமாள் கோவிலின் உள்ளே சுற்றி வரும் உரிமை நமக்கு மட்டுமே உண்டு.. இவ்வளவு நீண்ட நெடிய பந்தம் கொண்ட பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் முன்பெல்லாம் யாதவர்கள் தான் தர்மகர்த்தாவாக இருந்து வந்தனர்.. ஆனால் தற்போது இந்த முறை இல்லை.. ஆகையால் மீண்டும் யாதவர்களை ஆலய தர்மகர்த்தவாக நியமிக்க வேண்டும் என்பதுதான் எங்களின் தலையாய கோரிக்கை..

# வெற்றி வீரன்

## கீதாரிகளின் வாழ்வியல்...

வரப்பே தலையன வயக்காடே...
தேடு தேடுரத்துசெய்
ஏனுங்கையா
ஏனங்கையாக்கான

கீதாரிகளின் வாழ்வியல்...

வரப்பே தலையன வயக்காடே பஞ்சுமெத்த இதுதேன் கீதாரிங்க வாழ்க்க. இதுக்கு மேல ஒன்னும் சொல்ல தோணலிங்களே என்று ஒற்றை வரியில் கீதாரிகளின் வாழ்க்கையை சுருக்கினார் தஞ்சையை ஒட்டிய கிராமத்தில் ஆட்டுக் கிடை போட்டிருந்த பாஸ்கரன்.

ஐயா!

நீங்க சொல்றது ஒன்னும் விளங்கலையே?

சிவகங்கை மாவட்டம் இளையாங்குடிதே சொந்த ஊரு. எங்க ஊரே ஒட்டிய கிராமங்கள்ல கோனார் சாதிக்காரவுக அதிகம். அவக தொழிலே ஆடு மாடு மேய்கிறதுதேங். கோடையில ஆறு மாசகாலம் தஞ்சாவூரு மாவட்ட பகுதிய சுத்தி உள்ள நெலத்துல ஆடு மாடு மேய்ப்பாக. மீதி ஆறு மாசம் புதுக்கோட்டக் காட்டுப் பகுதிக்கு போயிடுவாக. ஆடு மாடு இல்லாதவுக, காணி(அளவு) காடு வச்சுருக்கவுக சிலபேரு ஊரோட இருப்பாக. ஊருக்கு தேவையிண்டா மட்டுந்தே போவோம். அதாவது சொந்தமுண்டு சொல்லிக்க ஊரு இருக்கும் ஆனா குடும்பம் நடத்துறது என்னவோ வெளியூருலதேன்.

ஏனுங்கையா ஒரே எடத்துல மேய்க்காமெ ஆறு மாச காலத்துக்கு ஒருக்க எடத்தை மாத்துரிங்க?

எங்க ஊரு பக்கம் வறட்சி அதிகம். ஆடு மாடுக மேய்க்கறதுக்கான காடு கழனி கெடையாது. ஆத்துப் பாசன பகுதில அறுப்பு முடிஞ்சு மறுக்க ஆத்துல தண்ணி வரும்வர கழனிக சும்மாத்தேன் கெடக்கும். மேச்சலுங்கு தோதுவா நெலமும் ஆடு மாடுக குடிக்க குளம் குட்டையும் இருக்கும். அங்கனக்குள்ளையே மேச்சு வெள்ளாமெ நெலத்துக்கு கெடையும் கட்டுவாக. ஆத்துல தண்ணி வந்து வெள்ளாமெ தொடங்கிச்சாங் காட்டி மந்தைய புதுக்கோட்டைக்கி ஓட்டிடுவாக. அங்கெ அரசு பாரஸ்ட் மலைக்காடு இருக்கு. எத்தன மழை பேஞ்சாலும் சேறு சகதி இல்லாம மேச்சல் இருக்கும். பகல் பொழுது மலையில மேச்சுட்டு ராத்திரியானா கீழ ஓட்டியாத்துருவாக. (பருவமழை காலத்தில் மலை பகுதியும் கோடை காலத்தில் சமவெளி பகுதியும் கிடை மந்தை கால்நடை களுக்கான மேய்ச்சல் பகுதியாகும்.)

**ஆட்டுக் கிடை போடும் பாஸ்க்கரன்**

ஆடு மேச்சு கிடை கட்டும் உங்க தொழில் முன்னைக்கி இப்ப எப்படி இருக்கு?

என்னோட எளவட்ட காலத்துல ஒத்தாளு 500 ஆடுகளோட ஊடாடுவே. அப்பெல்லாம் அறுப்பு முடிஞ்சு எக்கண்டமும் சும்மாத்தேங் கெடக்கும். என்னப்போல முப்பது கீதாரி குடும்பம் இந்த ஊருல தங்கி ஆடு கெட போடுவாக. அம்புட்டு ஆடுகளுக்கு மேச்சலுக்கு எடமிருக்கும். இருவது வருசமாத்தேன் இங்குட்டு போரு (ஆழ்துளை கிணறு) போட்டுட்டாக. திட்டுத்திட்டா வெவசாயம் செஞ்சுருக்காக. பயிறுக்கு போகாமெ ஆடுகள மடக்கி சோலி பாக்க வாய்க்கல. எங்குட்டு திருப்புனாலும் ஊரச் சுத்தி இதே நெலமதேன்.

ஆடுகளுக்கு முன்னப்போல மேச்ச நெலமுண்டு ஒன்னு இல்லிங்க. தண்ணி இல்லாமெ ஆடுக எறப்பு வாங்குது. குளம் குட்ட எங்குட்டு திரும்புனாலும் வறண்டு கெடக்கு. ஆடு மேஞ்சு முடிச்சு பட்டிக்கி திருப்பியாந்தா விடிய முட்டும் படுத்துக்கும். இப்ப அண்டையில உள்ள பயிருக்கு போயிருதுக. பொழப்புக்கு வந்த எடத்துல கீதாரி பயக வெள்ளாமைய அழிச்சுபுட்டாகன்னு ஒரு சேதி வந்துரப்படாதுல்ல. அதுக்காக ஆடுகள சுத்தி இரும்பு கம்பி அடிச்சி வல(லை) கட்டனும். பாலூட்டு குட்டிகள வெய்யிலு அண்டாமெ பாதுகாக்க கூடாரம், நாங்க படுக்க கட்டிலு இதையெல்லாம் அடுத்த கெடகட்டுற எடத்துக்கு தூக்கிட்டு போக வண்டி செலவுன்னு.. ரொம்பவும் செரமமாத்தே இருக்குங்க.

ஐநூறு ஆடு நின்ன எடத்துல 250 ஆடுகதே இருக்கு. முப்பது குடும்பம் வந்த எடத்துல 4 குடும்பந்தே வந்துருக்காக. 250 ஆட்டுக்கு 7,000 ரூபா கூலி குடுத்து ஒரு மேச்ச ஆளு வச்சுருக்கேன். இது அம்புட்டும் சொந்த ஆடுக அதுனால கூலியாள வச்சு மேய்க்கேன். பத்து இருவது ஆடு வச்சுருக்கவுகளும், மேச்சலுக்கு வர்ர ஊருல சிலபேரும் எங்கக்கிட்ட வாரத்துக்கு ஓட்டி விடுவாக. கூலி கெடையாது ஆடு ரெண்டு குட்டி போட்டுச்சாங்காட்டி ஒன்னு நமக்கு. ஒன்னு அவுகளுக்கு.

ஆட்டுக் கிடைக்குள் அடைக்கப்பட்டிருக்கும் செம்மறி ஆடுகள் மற்றும் தங்கும் கூடாரம்

ஆடு வளர்ப்புல லாபமா? கிடை கட்டுறதுல லாபமா?

ஆடு ஊடாடாமே காடு விளையாதும்பாக. ஆட்டுக் கெட உரந்தே ஒசந்ததா இருந்தது ஒரு காலம். இப்ப ரசாயன ஒரத்த சக்கரக் கணக்கா வயக்காட்டுல அள்ளி கொட்டுறாக. ஆட்டுப் புளுக்க மூத்தரத்தோட அருமெயெல்லாம் அத்துப் போச்சு. மணலு, வண்டலு, அதிகம் உள்ள கழனிக்கி ஆடு மாடு ஒரமும், கிளாரு மண்ணுக்கு (சுண்ணாம்பு மண்) வாத்து ஒரமும் இடுவாக. நெலத்துக்கு தக்கன வெதையும் ஒரமும் நம்மகிட்டேயே இருந்துச்சு. இப்ப வெதையோட

சேத்து ஒரத்தையும் இறக்குமதி பன்றாக. பூச்சி மருந்து கள(ளை)க் கொல்லின்னு, கண்டதும் போட்டாத்தே அதுவும் வெளையுது.

ஆடு காப்பணம், புழுக்க முக்காப் பணம்னு சொன்னதெல்லாம் அந்த காலம். இப்ப ஆரும் பெருசா கெட கட்டுவாக கெடையாது. போன வருசம் 250 ஆடு ஒருநா(ள்) கெட கட்ட 300 ரூபா வாங்குனேன். இந்த வருசம் மழத்தண்ணி இல்லன்னு 250 வாங்குரேன். ஒருநா வருமானம் ஒரு வார வெஞ்சனம் (காய்) வாங்க பத்தமாட்டேங்குது. பொறவு மேச்சகாரனுக்கு டீ, சாப்பாடு, வெத்தலபாக்கு, வாரத்துக்கொருக்க பாட்லு இதுக்கெ கெடகூலி பத்தாது. ஆட்டுல நாலு காசு வந்தாத்தே உண்டு. ஒரு ஆடு அஞ்சு அல்லது ஆறு ஆயிரத்துக்கு போகும். வருசத்துக்கு ரெண்டு குட்டி போடும். அத நல்லா மேச்சு குட்டிக்கு பால்குடுத்தா ஆறு மாசத்துல வளந்துரும். இதுலதே குடும்பம் படிப்பு கல்யாணம் எல்லா செலவும்.

கீதாரிகள் ஆடுங்களோட ஊர் ஊரா போறதா சொல்றீங்க, பிள்ளைகள எப்படி படிக்க வைக்கிறீங்க?

எங்க தொழிலே ஊரு ஊரா போறதுதேன். எங்குட்டு பிள்ளைகள ஒரு நெலையா படிக்க வைக்கிறது. ஆடு மாடுகள வாரத்துக்கு மேய்க்காமெ சொந்தமா வச்சு பண்ணையம் பாத்தவுக பிள்ளைங்க காசு, படிப்பு, வேலையின்னு இருக்காக. எங்கப்போல சிறுவ ஆடு வச்சுருக்கும் கோனாருக ஆசப்பட்டு பிள்ளைகள படிக்க வச்சாலும் பள்ளிக்கூடத்த தாண்ட முடியல. கீதாரி தொழிலும் சரிஞ்சு போச்சு. மேல படிக்க முடியாமே டிரைவரு, கண்டெக்டருன்னு வேலைக்கி போறாக.

இந்த ஊருல முப்பது வருசமா எனக்கு பழக்கம். அண்ண வீட்டு தோப்புலதே கூடாரம் போட்டு தங்கிக்கிடுதேன். அம்மி, ஒரலுன்னு சமையலுக்கு தேவையானத கொடுப்பாக. காசு பணமெல்லாம் அவக கிட்டதே குடுத்து வச்சுருப்போம். தாயா பிள்ளையா பழகிகிடுதொம். எங்க மாமா செத்தப்ப இந்த அண்ணெந்தே சாவு கோடி போட்டாக. எங்க வீட்டு நல்லது கெட்டது அவுக இல்லாம நடக்காது, அவுக வீட்டு நல்லது கெட்டது நாங்க இல்லாம நடக்காது.

அந்த பழக்கத்துல பெரியவெ(ன்) இங்கதே ஆறு வருசமா படிக்கிறேன். இந்த வருசத்தோட படிப்பு முடியிது. நாங்க இருக்குற ஆறு மாசம் எங்க கூட இருப்பேன். நாங்க புதுக்கோட்ட பக்கம் போனபொறவு இவக வீட்டுல தங்கிக்கிருவேன். அவுக பிள்ளப்போல பாத்துக்கிருவாக. சின்னவென் ஊருல இருக்கேன். எங்க காலத்தோட இந்த தொழிலு முடிஞ்சுரும் பிள்ளைங்க இனி செய்யாதுக.

ஊருல யாரு பையன பாத்துப்பாங்க? ஆடுங்கள தவிர எதுனா சொத்து இருக்குங்களாய்யா?

காக்காணி நெலமிருக்கு. அத நம்பி நாலு பேரு என்னத்த சாப்புட முடியும். ஆட்ட தவிர எனக்கு வேற தொழிலும் தெரியாது. காலங்காலமா செஞ்ச தொழில விட்டுபோட்டு இந்த வயசுக்கு மேல எங்குட்டு போயி சம்பாரிக்க முடியும். இருக்கவுகதேன் ஒத்து உணர்ந்து வேலைய பிரிச்சுக்குறனும். எங்கக்கா ஊருல எம்பையனையும் நெலத்தையும் பாத்துக்குறாக. நா அவுக ஆடுகள பாத்துகிடுதேன். ஆடுக நெறையா நின்னா தனிதனியா கெட போடுவாக. ஆடுக கம்மிங்கறதால சேந்து மேச்சுகிடுதோம்.

மருந்து குடுத்தது எந்த ஆடுண்டு தெரிஞ்சுக்க அடையாளம் போட்டுருக்கேன்

ஆட்டு தலையில கலர் கோடு போட்டுருக்கே வேற கிடை ஆட்டோட சேந்துருச்சின்னா கண்டுபிடிக்கற அடையாளமா?

வெய்யிலு காலம் நோயி வருமுண்டு மருந்து குடுத்துருக்கேன். மருந்து குடுத்தது எந்த ஆடுண்டு தெரிஞ்சுக்க அடையாளம் போட்டுருக்கே. மத்த கீதாரி ஆட்டோட கலந்து மேய்க்க மாட்டோம். எல்லாருமே தனிச்சுத்தேன் விடுவோம்.

செம்மறியாட்டு கூட்டத்துல நாளு வெள்ளாடும் நிக்குதே எதுக்குங்கையா?

செம்மறியாடு சாஞ்சா சாஞ்சபக்கம் போகும். போன வழி திரும்பி வரத்தெரியாது. வெள்ளாடுதே வழிகாட்டி ஆடுக. அதுக்கு அறிவு சாஸ்த்தி பயிரு பச்சைக்கி போனா சத்தம் போட்டா திரும்பிரும். பாம்பு, விலங்கு எது வந்தாலும் உசாராயி சத்தம் கொடுக்கும். இதுகளுக்கு ஒன்னு தெரியாது. வெள்ளாடு இல்லாமெ செம்மறியாட மேச்சலுக்கு ஓட்ட மாட்டாக.

பாம்பு, விலங்கு வந்தா என்ன செய்வீங்க?

கோனா(ன்) கோலெடுக்கும் போதே வெசமருந்து கூடவே எடுத்துட்டு போவான்ம்பாக. பாம்பு தீண்டிட்டா ஆடு கத்தும் அத பாத்து கால கீரிவிட்டு மருந்து கொடுப்போம். ஆடுகள கூட்டமா பாக்குற காட்டு வெலங்குக தானா ஒதுங்கி போயிடும். வாகனத்துல அடிபட்டா எங்க வீட்டுக்காரம்மா உப்புக்கண்டம் போட்ருவாக.

இரவு நேரத்துல ஆடுகளோட தனியா படுத்துருப்பிங்க திருட்டு பயம் எதுவும் இருக்குங்களா?

ஆடு களவாடுறது உண்டுதேன். மோட்டார் பைக்குல ரெண்டு ஆட்ட பொத்தி போட்டுகிட்டு போயிருவாக. ஆடு புடிக்கிறாகன்னு தெரிஞ்சாலும் எதுவும் செய்ய முடியாது. ஆயிதத்தோட அஞ்சாறு பேரு வந்துருப்பே தனி ஆளா நிண்டமுட்டா போட்டு தள்ளிருவானுக. எங்களுக்கு ஆடு மேய்ப்பர் யாதவ

சங்கம் இருக்கு. ஆடுதுறை வரைக்கும் எங்க ஆளுக பட்டி போட்டு ஆடு மேய்க்கிறாக, அப்புடி எங்க ஆளுக மூலியமா கேசு குடுத்து கண்டுபிடிச்சுகிடுவோம்.

ஒரு நாளு வருசத்துக்கு முன்னால இங்குட்டு (தஞ்சை) உள்ள கள்ளர்மாரு (கள்ளர்) சாதிக்காறவுக ஆட்ட களவாண்டுபுட்டாக. புதுக்கோட்ட பக்கந்தே வெள்ளாமெ வெளச்ச இல்லாம களவாடுவாக. இந்த பக்கமும் அப்படி செஞ்சுபுட்டாக. ஆட்டுக்காற சித்தப்பும், மேச்சக்கார பயலும் படுத்துருந்தாக. வண்டி வச்சு ஆடுகள ஏத்துனத பாத்துட்டு கையில இருந்த அருவாள வீசிபுட்டாரு கீதாரி. காலு நரம்புல பட்டு சுருட்டிகிட்டு விழுந்துட்டாங் களவாணிப்பய. பொறவு மந்திரி வைத்திலிங்கத்துக்கு (அ.தி.மு.க) வேண்டப்பட்டவன்னு சொல்லி கேசல்லாம் போடக்கூடாதுன்னு சொல்லிபுட்டாக.

இந்த ஊருக்காரவங்க உங்கள மரியாதையா நடத்துவாங்களா? கூலியெல்லாம் சரியா தருவாங்களா?

கோடையில கெட போட்டா, மறுக்க ஆத்துல தண்ணி வந்து வெவசாயம் பாத்து அறுப்பு முடிஞ்சுதே நெல்ல கெடகூலியா குடுப்பாக. கிட்டத்தட்ட ஒரு வருசம் ஓடிடும். ஆனா மொறையா குடுத்துருவாக. இப்பல்லாம் ஒடனே பணமா குடுத்துருவாக. என்ன ஒன்னு பத்து கெட போட்ட எடத்துல ஒரு கெடைக்கி உண்டான கூலிய தள்ளிக்க கீதாரிம்பாக. தாயா பிள்ளையா பழகிட்டு மறுக்க முடியாது. திருவிழா வருது உங்க படியா ஏதாவது கொடுங்கண்டு உரிமையா கேப்பாக. இந்த ஊருல ஆறு மாசம் ஆடு மேச்சுகிடுதோ நமக்கும் பங்குண்டுன்னு கையில கெடச்சத குடுப்பேன். சாமிக்கி குடுத்தாதானுங்களே மழதண்ணி பேஞ்சு பயிர் பச்ச மொழைக்கும் ஆட்டுக்கு மேச்சலிருக்கும்.

சாமிக்கு காசு கொடுத்தும் மழை தண்ணி இல்லாமெ ஊரே வறண்டு கெடக்கே சாமி ஏமாத்திடுச் சாய்யா?

ஆமான்னும் சொல்லாமல் இல்லைன்னும் சொல்லாமல் அழகாக சிரித்தார். வினவு செய்தியாளர்.

நன்றி!

வெற்றி வீரன்
மாயோன் வலைக்காட்சி

## கண்ணீர் அஞ்சலி



கோவை மாவட்ட (TSG) சொந்தம் பூசாகோ தொழில்நுட்ப கல்லூரியில் மெக்கானிக்கல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த திரு சுந்தரராஜன் (BK புதூர்) 04-08-2020 அவர்கள் காலமானார். அன்னாரது இழப்பு நமது சமூகத்திற்கும், தொழில்நுட்ப கல்வி துறைக்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறோம்.

**இங்ஙனம் வேலுசாமி யாதவ் உயர் மட்ட குழுத் தலைவர் மற்றும் கோவை மாவட்ட நிர்வாகிகள், யாதவர் பேரவை நிர்வாகிகள்**



சென்னை ஆடிட்டர் யுவராஜ் யாதவ் அவர்களது தாயார் திருமதி. **V.சந்திரா அம்மையார்** (வயது 89) அவர்கள் 09-08-2020 அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறோம்.

**இங்ஙனம் வேலுசாமி யாதவ் உயர் மட்ட குழுத் தலைவர் மற்றும் கோவை மாவட்ட நிர்வாகிகள், யாதவர் பேரவை நிர்வாகிகள்**

# யாதவர்கள்
## யார் என்று தெரியுமா?



ஒரு ஐந்து நிமிடம் இந்த பதிவினை படியுங்கள் அன்பான என் ஆயர் குலத்திற்க்கு வணக்கம்..

என் அன்பு சகோதர, சகோதரிகளே ஜாதி சான்றிதழில் மட்டும் யாதவ் என்று போட்டு கொண்டால் போதுமா? முடிந்த வரையில் இனி வரும் தலைமுறை நமது அடுத்த சந்ததிகளுக்கு பெயர் வைக்கும் போது எடுத்துகாட்டாக

கேசவ கிருஷ்ணன்
நவநீத கிருஷ்ணன்
யது கிருஷ்ணன்
யாதவ கிருஷ்ணன்
வருன் கிருஷ்ணன்
கோகுல கண்ணன்
ரமேஷ் கண்ணன்
ராஜேஸ் கண்ணன்

நம் குழந்தைகள் பெயருக்கு பக்கத்தில் கிருஷ்ணன் கண்ணன் என்று பார்த்து வைக்குமாறு உங்களை தாழ்மையுடன் கேட்டுகொள்கிரேன்.

இந்தியாவில் பொதுவாக உயர்ந்த சமுதாயம் யார் என்று கேட்டால் ஐய்யர் என்று சொல்வார்கள், சரி அப்படியே வைத்து கொள்வோம் அந்த ஐய்யர் வீட்டு பூஜை அறை யில் போய் பாருங்கள் கிருஷ்ணன் இருப்பார்,யார் இந்த கிருஷ்ணன் ஒரு இடையன், அப்படியென்றால் இடையன் யார்? இந்த கேள்வியே உங்களிடமே விட்டு விடுகிறேன்.

நாங்கள் தான் ஆண்ட இனம் என்று பீத்திகொள்ளும் சமுதாயங்கள் 17 ம் நூற்றாண்டுக்கு முன் இவர்களின் வரலாறு என்னென்வென்று கேலுங்கள் அவர்களுக்கே தெரியாது, ஆனல் உன் முப்பாடன் ஆனந்தகோன் 11 ம் நூட்றாண்டில் செஞ்சியே கட்டி ஆண்டவன் 1100ல் இருந்து 300 வருடங்கள் கோனார் ஆண்டுள்ளார்கள் அதர்க்கு செஞ்சிகோட்டயே சான்று.

நீ ஒளவைக்கு அற்புத கனி கொடுத்த அதியமானின் பரம்பரை.

பாண்டியனின் வம்சம் நீ, அதை நான் சொல்ல வில்லை, இந்த உலகத்திர்க்கு மகா பாரதம் தந்த வீயச மாமுனிவரின் எழுத்துக்கள் சொல்கிறது, பாண்டியன் சந்திர வம்சத்தை சேர்ந்தவன் என்பதற்கு வியாச மாமுனிவரே சான்று.

கம்பனின் ராமயணத்தில் சாரா நதியே பற்றி குறிப்பிடும் போது, அந்த நதியில் இடைச்சிகளின் ஆடைகள் அடித்து செல்லபட்டது என்று சாரா நதியே வர்னித்து இருப்பார். ஆக ராமாயண காலத்திலே இடையன் வாழ்ந்திருக்கிறான் என்பதற்கு கம்பனே சான்று.

5 நிலத்தில் வாழ்ந்த எவருக்கும் அரசன் என்கிற பட்டம் உன்னை தவிர யாருக்கும் இல்லை, என்ன புரியவில்லையா முல்லை நிலத்தில் வாழ்ந்த உனக்குதான் "கோன்' இதர்க்கு தமிழில் அரசன் என்று பொருள். கோவலன் அவரின் மனைவி கண்ணகியே ஒரு இடையர் வீட்டில்தான் தங்கவைத்துவிட்டு வெளியில் சென்றார்.

ஏறுதழுவல் உன்னுடைய விளையாட்டு நான் சொல்லவில்லை, கலி தொகை சொல்கிறது.

**கடை ஏழு வள்ளல்கள் :**

பேகன்
பாரி
காரி
ஆய்
அதிகன்
நள்ளி
ஓரி

யார் இவர்கள் உன் பரம்பரையே சேர்ந்தவர்கள் தான் இவர்களும்.

ஆநந்தரங்க பிள்ளை முதன் முதலில் கப்பல் ஓட்டிய தமிழன், ஒரு இடையன் என்பதற்காக அது மறைக்கப்பட்ட கொடுமை.

ஆனந்த கோன் - செஞ்சிகோட்டையே கட்டியவர் கிருஷ்ணகோன்- கிருஷ்ணகிரி கோட்டையே கட்டியவர், யாருக்காவது தெரியுமா இந்த மாமன்னர்களை பட்றி 17ம் நூற்றாண்டுக்கு பின் வந்தவர்களை புகழ் பாடும் இந்த திருட்டு கும்பலுக்கு ஏன் இடையன் மீது இவ்வளவு ஏற்றதாழ்வு என்பது இதுவரை புரியாத புதிர்தான்.

ஔரங்கசீப்பை ஓட ஓட விரட்டி அடித்தவன் நம் வீர சிவாஜி, மராட்டிய தலைவன்.

ஹரி இந்த உலகத்தை படைத்தார் ஹரி பிரம்மனை படைத்தார்

பிரம்மன் ஏழு ரிஷிகலே படைத்தார் அதில் ஒருவர் தான் சந்திரன்.

இந்த சந்திர வம்சத்தில் வந்தவர்கள்தான் யாதவர்கள், என்ன புரியவில்லையா விளக்கம் தருகிறேன் பொருமையாக படியுங்கள்,

சந்திரனுக்கு, தட்சன் தனது 60 மகள்களில் 27 மகள்களை சந்திரனுக்கு கட்டி கொடுத்தார்,

திருவாதிரை
ரோகினி
மூலம்
புனர்பூசம்

இது போன்ற 27 நட்சத்திரங்கள் சந்திரனுக்கு கட்டி வைக்கப்பட்டது.

இதில் சந்திரன் அன்பாக இருந்தது ரோகினி நட்சத்திரதிடம் தான்.

தேவர்களின் குல குருவான பிரகஸ்பதியின் மனைவி தாரையின் அழகில் சந்திரன் மயங்கி, தாரையே தூக்கி சென்று விட்டார். இதனால் கடும் கோபம் அடைந்த பிரகஸ்பதி பிரம்மனிடம் முறையிட்டார், சந்திரன் அசுர குலகுருவான சுக்ராச்சாரியிடம் தஞ்சம் அடைந்தார்.

பிறகு பிரம்மன் தலையிட்டு தாரையே மீட்டு பிரகஸ்பதியிடம் ஒப்படைத்தார், அப்போது சந்திரனின் கரு தாரையின் வயிற்றில் இருந்தது, அதனால் தாரையே பிரகஸ்பதி ஏற்றுகொள்ளவில்லை.

**சந்திரனுக்கும் தாரைக்கும் பிறந்த மகன் புதன்.** – புதனுக்கும் இலை என்கிற பென்னுக்கும் பிறந்தவர் தான் ஆயூஸ் மன்னன் - ஆயூ மன்னனுக்கு பிறந்தவர்தான் புரூருவஸ்.

**புரூருவஸ்க்கும் ஊர்வசிக்கும் பிறந்தவர் தான் நகுசன்** - நகுசனுக்கு 5 பிள்ளைகள் அதில் மூத்தவர்தான் யயாதி - யயாதியின் மூத்த மனைவி தேவையானிக்கும் பிறந்தவர்கள்தான் யது (நம் முப்பாட்டன்) துர்வசு ( சின்ன முப்பாட்டன்)

யயாதியின் இரண்டாவது மனைவி சர்மிஸ்டை இவலுக்கு மூன்று மகன்கள் திரஹ்யூ அனூ புரு

யாயாதி மன்னனுக்கு இளைமை தேவை யானியின் தந்தை சுக்ராசாரியரால் பரிபோகிரது

விமோச்சனம் என்ன என்று கேட்டதர்க்கு உன் மைந்தர்கள் யார் இளைமையே தருகிறார்கலோ நீ பெற்று கொல்லலாம் என்றார் சுக்ராசாரியார். என்ன காரனம் என்றால் தன் மகளுக்கு தெரியாமல் இரண்டாவது திருமணம் செய்து கொண்டமையால் இந்த தண்டனை வழங்கப்பட்டது.

இளமையே எல்லா மைந்தர்களும் மருத்துவிட கடைசி மைந்தன் புருவாள் கிடைகிறது, அதனால் அரசாட்சி யது, துர்வசுக்கு மருக்கபட்டு புருவுக்கு நாடு வழாங்கபட்டது.

**புரு மன்னனுக்கு பிறகு வந்தவர்கள்**

ஜனனேஜெயன்
பிரசாவன்
சாயதி
திடன்
நீலன்

துணயந்தன் - சகுந்தலை (இவள் ஒரு யாதவ பெண்)
பரதன்
பௌமன்
சுகேத்திரன்

அஸ்தன் - அஸ்தினா புரம் என்று பெயர் வரக் காரனமாய் இருந்தவன்.
நிகும்பன்
அரசமீளி
வருணன்

குரு - இவர்தான் கௌரவர்கள் என்கிற பட்டத்தை வாங்கியவர்.
பிரதீபன்
சந்தனு
பீஸ்மர்
சித்திர வீரியன்

1.திருதிராஷ்டன் 2.பாண்டு

திருதிராஸ்டனின் மைந்தர்கள் துரியோதனன் என்கிற இடையன். எப்படி இடையன் ஆக முடியும் என்ற சந்தேகமா?

**திருதிராஷ்டனின் மனைவி காந்தாரி** – யார் அந்த காந்தாரி?? யதுவின் தம்பி துர்வசுவின் வழியில் வந்தவல்தான் இந்த காந்தாரி.

**பாண்டுவின் மைந்தர்கள்**

1.தர்மன்
2.பீமன்
3.அர்ச்சுனன்
4.நகுலன்
5.சகாதேவன்

இவர்களும் யாதவர்கள்தான், என்ன சந்தேகமா??? பாண்டுவின் மனைவி குந்தி யார் என்று தெரியுமா??? மூத்த மகன் யதுவின் வம்சத்தில் பிறந்தவள்தான் இந்த குந்தி. மூத்த மகன் யதுவுக்கு பட்டத்தையும் பதவியையும் வாங்கி கொடுக்கவே கிருஷ்ணன் யது குலத்தில் யாதவாக அவதரித்தார்.

பாராத போருக்கு பின் காந்தாரி சாபத்தல் யாதவர் இனமே முழுமையாக அழிந்து போனது.

ஒரு நாள் மேலிருந்து கீழாக கிருஷ்ணன் பார்த்தார், கங்கை, யமுனையுடன் சேர்ந்து கண்ணீர் நதியும் ஓடியது,

திகைத்தி போன கிருஷ்ணன் கீழே வந்து பூமி தேவியுடன் கேள்வி கேட்டார், அதர்க்கு பூமி அன்னை சொன்ன பதில் ' பிரபுவே இந்த பாவ லோகத்தில் இந்த பாவியர்கலை என்னால் சுமக்க முடியவில்லை, யாதவர்களின் கால் தடங்கள் திரும்ப பட்டால்தால் இது மோட்சம் அடையும் என்று பூமி அன்னை சொல்ல உடனே 9 இடங்களில் ஆயர் இனம் அவதரிக்கப்பட்ட்து.

இடையனே இடையனே உன் வரலாறு இது கேட்டு விட்டு திகைத்து விடாதே. மனிதனாய் பிறப்பது எளிது ஆனால் யாதவனாய் பிறப்பது அரிது. எக்குலமும் வாழட்டும் யாதவனே ஆழட்டும்.

வாழ்க யாதவம், வளர்க பாரதம்.

நன்றி!

... யாதவ் (மீசை ராசு)

# வாழ்த்துக்கள்!



Name : **R. R. Rakshitha**

Father Name : **Dr. Rajesh** M.B.B.S., DCH.
Mother Name : **R. Indumathi** B.D.S

| **Subject** | **Marks** |
|---|---|
| English | 099 |
| Tamil | 093 |
| Mathematics | 100 |
| Science Theory | 100 |
| Social Science | 095 |
| **Total Marks** | **487** |



Name : **S. Saranya**

Father Name : **R. Srinivasan**
Mother Name : **S. Kavitha**

| **Subject** | **Marks** |
|---|---|
| English | 099 |
| Tamil | 100 |
| Mathematics | 100 |
| Science Theory | 100 |
| Social Science | 099 |
| **Total Marks** | **498** |

## பாலூட்டும் அன்பிலே அன்னை நீயே! பழகும் உறவிலே பிள்ளை நீயே!




சுக்கன் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வாழ அருளும் கோபிநாதசுவாமி, திண்டுக்கல் அருகிலுள்ள ரெட்டியார் சத்திரத்தில் அருளுகிறார்.

**தல வரலாறு:**வடநாட்டில் பசுக்களை மேய்த்து வந்த ஒரு தாயும், மகனும் பசுக்களுடன் இங்கு வந்தனர். ஒருசமயம், இங்கு பஞ்சம் ஏற்படவே பல பசுக்கள் மடிந்தன. பசுக்களின் மீது அன்பு கொண்ட அந்த பசுமேய்ப்போன், பசுக்களின் உயிரை எடுப்பதற்குப் பதிலாக, தன் உயிரை எடுத்துக்கொள்ளும்படி கிருஷ்ணரிடம் பிரார்த்தித்தான். பஞ்சம் நீங்கியது. பசுக்களை காப்பாற்றிய இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக, தான் வேண்டியபடி உயிரை விட்டான்.மகனை இழந்த தாயும் உயிர் விட்டாள்.

இப்பகுதியில் வசித்த பக்தர் ஒருவர், பசுக்களைக் காக்க ஆயர் பாடியிலிருந்து கிருஷ்ணரும், யசோதையுமே இங்கு வந்து உயிரை தியாகம் செய்ததாக கருதி அவர்களை மானசிகமாக வணங்கி வந்தார்.ஒரு சமயம் அவரது கனவில் தோன்றிய கிருஷ்ணர், இம்மலையைச் சுட்டிக் காட்டி அவ்விடத்தில் அந்த தாய்க்கும், மகனுக்கும் கோயில் எழுப்பும்படி கூறினார். அதன்படி பக்தர் அவர்களுக்கு சிலை வடித்தார், சுவாமிக்கு கோபிநாதர் என்றும் அவரது தாயாருக்கு கோப்பம்மாள் என்றும் பெயர் சூட்டினார்.

**பிரார்த்தனை தலம்:**பசுக்களுக்கான பிரார்த்தனை தலமாக இக்கோயில் திகழ்கிறது. பசுக்கள் கருத்தரிக்கவும், அவை நோயின்றி வாழவும், அதிக பால் சுரக்கவும் விவசாயிகள் இங்கு வேண்டி கொள்கிறார்கள்.வேண்டுதல் நிறைவேறியதும் அப்பசுக்கள் முதன்முதலிதல் சுரக்கும் பாலைக்கொண்டு வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்து, பால் சாதம் படைத்து, துளசி மாலை அணிவித்து நேர்த்தி கடன் செலுத்துகின்றனர். பசுக்களின் உருவ பொம்மையையும் செய்து வைப்பதுண்டு. சுவாமிக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தையும், இம்மலையில் விளையும் தர்ப்பைப் பிள்ளையும் பசுக்களுக்கு கொடுத்தால், அவை நோயின்றி வாழும் என்கிறார்கள்.

**தாய்க்கு முதல் பூஜை:**620 படிக்கட்டுக்களுடன் அமைந்த மலைக்கோயில் இது. புல்லாங்குழல் வாசித்தபடி கோபிநாதர் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். அருகில் கன்றுக்கு பால் கொடுக்கும் பசுவின் சிலை இருக்கிறது. கோபிநாதருக்கும் நடக்கும். மூன்று கால பூஜையின் போது சேகண்டி ஒலித்து சங்கு முழங்கும் வழக்கம் உள்ளது. சங்கு மகாலட்சுமி அம்சம் என்பதாலும், சுவாமியின் ஆயுதங்களில் ஒன்று என்பதாலும் இவ்வாறு செய்கின்றனர். சன்னதி முன் மண்டபத்தில் கோப்பம்மாள் காட்சி தருகிறார். பிள்ளையை விட தாய்க்கே முக்கியத்துவம் தர வேண்டுமென்பதன் அடிப்படையில், இவரை பூஜித்த பின்பே கோபிநாதருக்கு பூஜை செய்கின்றனர். தாயும் பிள்ளையும் காட்சி தரும் தலம் என்பதால் குழந்தை பாக்கியம் கிடைக்கவும், பிள்ளைகள் பெற்றோர் மீது பாசத்துடன் இருக்கவும், பெண்கள் தங்கள் புடவையில் ஒரு பகுதியைக் கிழித்து, தொட்டியில் கட்டி வேண்டுகிறார்கள். மலையடிவாரத்தில் கருடாழ்வார் ஆஞ்சனேயருக்கு சன்னதிகள் உள்ளன. இங்கு கிருஷ்ணஜெயந்தி விழா மூன்று நாட்கள் நடக்கிறது. இவ்விழாவின் போது மட்டும் உற்சவர் கிருஷ்ணர் மலையிலிருந்தது புறப்பாடாகி,வீதி உலா சென்று நான்காம் நாள் கோயிலுக்கு திரும்புகிறார்.

**இருப்பிடம் :**திண்டுக்கல்லில் இருந்து 18 கி.மீ., தூரத்திலுள்ள ரெட்டியார் சத்திரம் சென்று, அங்கிருந்து 5 கி.மீ., சென்றால் கோயிலை அடையலாம். திறக்கும் நேரம் : காலை 8 மாலை 5 மணி



# தலைமை நிலைய செயலாளர் செய்தி

## தலைமை நிர்வாக செலவு கணக்குகள்

## July to August 2020

**Mr. K.Kothandaraman Yadav, Cell : 94440 50110**

| S.No. | Expenses Head of Accounts | Amount |
|---|---|---|
| 1. | Magazine | 20,264 |
| 2. | Stationery / Courier | 2,344 |
| 3. | Salary | 12,000 |
| 4. | Meeting | 320 |
| | **TOTAL** | **34,928** |

| S.No. | Name & Address | Receipt Book No. | Receipt Voucher No. | Amount | Date | Payment |
|---|---|---|---|---|---|---|
| 1. | Mr. V.Vasantha Kumar Yadav | 82 | 4082 | 25000 | 13.08.2020 | VN |
| 2. | Mr.V.Agathiyan Yadav | 05 | 419 | 150 | 20.07.2020 | OYM |
| 3. | Mr. K.Suresh Yadav | 05 | 420 | 150 | 20.07.2020 | OYM |
| 4. | Dr. M..Krisha Moorthy Yadav | 82 | 421 | 150 | 07.08.2020 | OYM |
| 5. | Mr. A.P.Sekar Yadav | 82 | 422 | 150 | 13.08.2020 | OYM |
| 6. | Mr.Avudaiyappan Yadav | 82 | 423 | 150 | 13.08.2020 | OYM |
| 7. | Mrs.Kasthuri Thilagam Yadav | 82 | 424 | 150 | 13.08.2020 | OYM |
| 8. | Mr. T. Sarathy Yadav | 82 | 425 | 1660 | 14.08.2020 | A/OYM |

VN- வளர்ச்சி நிதி  OYM - ஒலிக்கும் யாதவர் முரசு  HM – ஆயுள் உறுப்பினர்


**மணமகன் தேவை**

**பொ. லோகேஸ்வரி**
B.Tech., IT



நட்சத்திரம் : பரணி
ராசி : மேஷம்
உயரம் : 5.4, சிவப்பு
பிறந்த தேதி : 30.10.1993 நேரம் : 10.55 pm
தந்தை பெயர் : T.A. பொன்மொழிச்செல்வன் திருவள்ளூர்
தொலைபேசி : 90436 27910, 98940 86167



"சொல்வதை செய்வோம்
செய்வதை சொல்வோம்"

# கல்வி உதவி நிதி வேண்டுகோள்

## YPWT - 2019 - 2020



திரு. சோலைமலை பிச்சை யாதவ்
Y.P. Welfare Trust, jiyt®



திரு. வசந்த குமார் யாதவ்
Y.P. Welfare Trust, J.jiyt®



திரு. நவநீத கிருஷ்ணன் யாதவ்
Y.P. Welfare Trust, brayhs®



திரு. P. அசோக் குமார் யாதவ்
Y.P. Welfare Trust, bghUshs®



திரு. B. அரசு ஸ்ரீனிவாசன் யாதவ்
Coordinater
தமிழ்நாடு யாதவர் பேரவை பொது செயலாளர்

**இதுவே தருணம்!**

சரியான சேவைக்கு தேவை நிதி. கிராமப்புற ஏழை யாதவச் செல்வங்களுக்கு கல்வியுதவி செய்வோம்! கல்வி உதவி கேட்டு வரும் விண்ணப்பங்கள் எண்ணிக்கை அதிகம்.

வரும் ஜூன் மாதங்களில் நல்ல மதிப்பெண் பெறும் மாணவ செல்வங்களின் உயர்கல்விக்காக உதவிட, உறுதி செய்திட

## Y.P. Welfare Trust, Chennai

என்ற பெயரில் நன்கொடை அனுப்பி உதவ வேண்டுகிறோம். நீங்கள் அளிக்கும் உதவி தொகைக்கு 80ழு இன் படி வருமான வரி விலக்கு உண்டு.

தாங்கள் தரும் தொகை உண்மையிலேயே திறமையான, வசதியற்ற, தாய் தந்தை இல்லாத நபர்களுக்கு சென்றடையும் வண்ணம் தேர்வு செய்யப்பட்டு ஆண்டுதோறும் ஜூன் – ஜூலை மாதத்தில் உயர்கல்வி பெறும் மாணவ மாணவியர்களின் கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கி வருகிறோம்.

**கல்வி நிதி வழங்குவோருக்கான வங்கி விபரங்கள் :**

**Y.P. WELFARE TRUST**
**A/c. No. 872422872 BANK : INDIAN BANK**
BRANCH : CLOCK TOWER, ROYAPETTAH, CHENNAI - 14.
IFSC CODE : IDIB000C038
A/C : SAVING ACCOUNT

# நெற்குப்பை to மகிபாலன்பட்டி

**சாலையில் உள்ள ஒரு சிறு கிராமம் பூங்குன்றம். இங்கு பிறந்த கணியன் பூங்குன்றனார் எழுதிய பழமையான பாடல் ஒன்று, இன்று உலகம் முழுவதும் உச்சரிக்கப்படுகிறது.**

**யாதும் ஊரே யாவரும் கேளிர்....**

இதன் முதல் வரி மட்டுமே பிரபலமாகி வருகிறது.
பாடலின்
எல்லா வரிகளும் வாழ்வின்
முழு தத்துவத்தைச் சொல்கிறது.....

முழு பாடலும்... அதன் பொருளும்....

*"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;*
தீதும் நன்றும் பிறர்தர வாரா;*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;.....*
*சாதலும் புதுவது அன்றே;...*

*வாழ்தல் இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே;*
*முனிவின் இன்னாது என்றலும் இலமே;*
*மின்னோரு வானம் தண்துளி தலைஇ ஆனாது*

*கல்பொருது இரங்கும்வ மல்லல் பேர்யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது* *திறவோர்காட்சியின் தெளிந்தனம்...*
*ஆதலின் மாட்சியின்*
*பெயோரை வியத்தலும் இலமே;*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.* கணியன் பூங்குன்றனார்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்*...."

எல்லா ஊரும்
எனது ஊர்....
எல்லா மக்களும் எனக்கு உறவினர் என்று நினைத்து,
அன்பே வாழ்வின் அடிப்படை,ஆதாரம் என்று
வாழ்ந்தால் , இந்த வாழ்வு நமக்கு எவ்வளவு
இனிமையானது............ சுகமானது......

*"தீதும் நன்றும் பிறர் தர வாரா*...."

தீமையும், நன்மையும் அடுத்தவரால்
வருவதில்லை.......எனும் உண்மையை,உணர்ந்தால்,
சக மனிதர்களிடம்,விருப்பு வெறுப்புஇல்லா ஒரு சம
நிலை,சார்ந்த வாழ்வு கிட்டும்.....

*"நோதலும் தனிதலும்*
*அவற்றோ ரன்ன...."*
துன்பமும் ஆறுதலும்கூட
மற்றவர் தருவதில்லை....
மனம் பக்குவப்பட்டால்,
அமைதிஅங்கேயேகிட்டும்...

*"சாதல் புதுமை யில்லை*.."

பிறந்த நாள் ஒன்று உண்டெனில் .....
இறக்கும் நாளும் ஒன்று உண்டு....*
இறப்பு புதியதல்ல....அது
இயற்கையானது....
எல்லோருக்கும்*
*பொதுவானது....
இந்த உண்மையை
உணர்ந்தும், உள் வாங்கியும் வாழ்ந்தால்....

எதற்கும் அஞ்சாமல்,
வாழ்க்கையை, வாழும் வரை ரசிக்கலாம்.......

*"வாழ்தல் இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே*
*முனிவின் இன்னாது என்றலும் இலமே....."*

இந்த வாழ்க்கையில்
எது, எவர்க்கு, எப்போது,
என்னாகும் என்று
எவர்க்கும் தெரியாது.....
இந்தவாழ்க்கை மிகவும்
நிலை அற்றது.....
அதனால், இன்பம் வந்தால்
மிக்க மகிழ்வதும் வேண்டாம்...
துன்பம் வந்தால் வாழ்க்கையை வெறுக்கவும் வேண்டாம்......
வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து இயல்பாய் வாழ்வோம்....

*"மின்னோரு* *வானம்* *தண்துளி தலைஇ*
*ஆனாதுகல்பொருது* *இரங்கும்வ மல்லல்* *பேர்யாற்று
நீர்வழிப்* *படூஉம் புணைபோல்* *ஆருயிர் முறைவழிப்
படூஉம் என்பது திறவோர் காட்சியின் தெளிந்தனம்* ....."

இந்த வானம் நெருப்பாய்,
மின்னலையும் தருகிறது....
நாம் வாழ மழையையும்
தருகிறது.....இயற்கை வழியில்அது,அது
அதன் பணியை செய்கிறது....

ஆற்று வெள்ளத்தில்,
கற்களோடு, அடித்து முட்டி செல்லும்படகு போல,
வாழ்க்கையும்,சங்கடங்களில் அவர்,அவர் ஊழ்படி அதன்
வழியில்
அடிபட்டு போய்கொண்டு இருக்கும்....
இது இயல்பு என மனத்தெளிவு கொள்ளல் வேண்டும்...

*"ஆதலின்* *மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும்* *இலமே;*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே*...."

இந்த தெளிவு
பெற்றால்.....,

பெரிய நிலையில் உள்ள பெரியவர்களைப் பாத்து
மிகவும் வியர்ந்து பாராட்டவும் வேண்டாம்...

சிறிய நிலையில் உள்ள
சிறியவர்களைப் பார்த்து
ஏளனம் செய்து இகழ்வதும்
வேண்டாம்.....

அவரவர் வாழ்வு
அவரவர்க்கு.....
அவற்றில் அவர்,அவர்கள்
பெரியவர்கள்...

பெரியவர்கள்...

*இதை விட வேறு எவர்*
*வாழ்க்கைப் பாடத்தை*
*சொல்லித் தர முடியும்?*

## ஒலிக்கும் யாதவ முரசு - வேண்டுகோள்

யாதவர் பேரவை செய்தி மாத இதழான "ஒலிக்கும் யாதவர் முரசு" 2005ஆம் ஆண்டு முதல் யாதவர் பேரவையின் ஆயுள் சந்தாதாரர்களுக்கு இலவசமாக அனுப்பப்பட்டு வந்தது. நாளது வரை வரன் தேடுபவர்களின் விபரங்களும் இலவசமாகவே வெளியிடப்பட்டு வருகிறது.

தற்போது அச்சுக்கூலி உயர்வு, காகித விலை ஏற்றம், மற்றும் அலுவலக நிர்வாக செலவு அதிகரிப்பு இவற்றால் பத்திரிகைக்கு மட்டும் ஒரு வருட சந்தா ரூ.150/– எனவும், 5 வருட சந்தா ரூ. 750/– எனவும் யாதவர் பேரவையின் செயற்குழு முடிவு செய்துள்ளது. எனவே இதழ் தங்கள் இல்லம் தேடி வர உடனே சந்தாதாரர் ஆகிவிடுங்கள். இது யாதவர்களில் முன்னேற்றத்திற்கு தாங்கள் செய்யும் ஒரு சிறு உதவி ஆகும். நேரிலோ அல்லது காசோலை ஆகவோ அல்லது உங்கள் பகுதியில் உள்ள இந்தியன் வங்கி கிளையில் கீழ்கண்ட விபரப்படி செலுத்தி விபரம் தெரிவிக்கவும்.

**வரும் நாட்களில் சந்தாதாரர்களுக்கு மட்டும் மாத இதழ் அனுப்பபடும்**

27/11, பைகிராப்ட்ஸ் ரோடு
2வது தெரு, இராயப்பேட்டை,
சென்னை – 600014.

Name: Yadavar Peravai,
Bank: Indian Bank, A/c. No. 701412555
Clock Tower Branch, IFC Code:IDIB000C038

# தெரிவிக்க வேண்டிய தொலைபேசி : 9444134142

**ஒலிக்கும் யாதவ முரசு சந்தா கட்டணம்**

**ஒரு வருட சந்தா தொகை ரூ. 150/–**

**ஐந்து வருட சந்தா தொகை ரூ. 750/–**

## விளம்பரங்களை வரவேற்கிறோம்

நம் ஒலிக்கும் யாதவர் முரசு நம் இன சொந்தங்கள் தங்கள் நிறுவனம் சார்ந்த விளம்பரத்தை கொடுத்து நல் ஆதரவு தரவேண்டுகிறோம்.

## விளம்பர கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கலரில் : பின் அட்டை மாதம் | : | ரூ. 4000 |
| அட்டை உள்பக்கம் பின், முன் | : | ரூ. 2000 |
| உள்பக்கம் கலரில் | : | ரூ. 2000 |
| உள்பக்கம் கருப்பு வெள்ளை | : | ரூ. 1500 |
| கறுப்பு / வெள்ளை அரைப்பக்கத்திற்கு | : | ரூ. 1000 |
| கால் பக்கத்திற்கு | : | ரூ. 500 |

நீதிக்கதைகள்

# இராமபக்த அனுமான்



இராமபக்தி என்றால் அனுமனைத் தவிர வேறு எவரையும் நாம் நினைத்து பார்க்க முடியாது. இராம நாமத்தை தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர். இராம கைங்கர்யம் என்பதை உலகுக்கு காண்பித்தவர். இராம நாமத்தின் மகிமையையும் சக்தியையும் நிரூபித்தவர்.

